**2018–ம் ஆண்டு ஜீலை மாதம் 03–ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள திண்டிவனம் நகர மன்றத்தின் சாதாரணக் கூட்ட மன்ற பொருள்.**

**முன்னிலை : திரு. பு. ஸ்ரீபிரகாஷ்**
**தனி அலுவலர்(பொ)**
**திண்டிவனம் நகராட்சி.**

1. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிடங்கல் கிராமம் சர்வே எண்கள். 396/2A, 396/2B பகுதி ஆகியவற்றில் 1.65 ஏக்கர் (அ) 71874.00 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 73/2017/விம, நாள். 11.05.2018ல் கிடங்கல் கிராமம் சர்வே எண்கள். 396/2A, 396/2B பகுதி ஆகியவற்றில் 1.65 ஏக்கர் (அ) 71874.00 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ணா நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ந.ஊ.உ.இ (வி.ம) எண்.345/2018(R) என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 1.65 ஏக்கர் (அல்லது) 71874.00 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 44 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 39 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 5 |

<u>பொது ஒதுக்கீடு</u>

பூங்கா – 417.69 ச.அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10%)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 17,18,19 பகுதி 20 மற்றும் 25 ஆகிய மனைகளின் பரப்பளவு 350 ச. மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுரமீட்டருக்கு ரூ. 60.00 வீதம் ஆக 350 ச. மீட்டருக்கு ரூ. 21000/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச. மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் ஆக 350 ச.மீட்டருக்கு ரூ. 87500/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்து கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2120/2018/எப்1)

178) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

2. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை அகற்றப் பயன்படுத்தப்படும் TN16-6438 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 31.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | TN16-6438 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல். | ரூ.45,000/– | மைலம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம். கூட்டேரிப்பட்டு. | 0.55% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | விழுப்புரம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம், | 0. % மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மைலம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம். கூட்டேரிப்பட்டு. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1614 / 2018 / எச்1)

3. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் கொசு ஒழிப்பு பணிக்கு தேவையான சிறிய அளவிலான 7 புகை மருந்து தெளிக்கும் இயந்திரம் சப்ளை செய்ய 31.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | கொசுஒழிப்பு பணிக்கு தேவையான சிறிய அளவிலான புகைமருந்து தெளிக்கும் இயந்திரம்–7 எண்ணிக்கை சப்பை செய்தல். | ரூ.5,00,000/– | Systems Engineering 1. Annai Sathya Nagar, Main road, sentamil Nagar, Ramapuram Chennai-89. | 3.40% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | S.N. Enter Prices Plat No.6, door No.1G, Rajaji Avenue Valasaravakkam, Chennai-87. | 0.60% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Systems Engineering 1. Annai Sathya Nagar, Main road, sentamil Nagar, Ramapuram Chennai-89. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2095 / 2018 / எச்1)



(179) அனுமதிக்கப்பட்டது

(180) அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

4. இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் குப்பைகளை அகற்றப் பயன்படுத்தப்படும் TN32Q-7432 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய 31.05.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | TN32Q-7432 வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல். | ரூ.95,000/– | மைலம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம். கூட்டேரிப்பட்டு. | 3.36% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | விழுப்புரம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம், | 2.21% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள மைலம் வேளாண்மை பொறியியல் பணி கூட்டுறவு மையம். கூட்டேரிப்பட்டு. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1613 / 2018 / எச்1)

181) அனுமதிக்கப்பட்டது

5. தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (TURIF) 2017–18ன் கீழ் இந்நகராட்சி சாலை பணிகள் மேற்கொள்வதற்கான கருத்துருவினை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு ரூ50.00/–இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகர மன்ற தீர்மான எண் : 1205 நாள் : 31.07.2017ல் அனுமதி பெற்று கருத்துரு சமர்பிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் : 21422/2017/E3 நாள் : 03.10.2017ல் நிர்வாக அனுமதி ரூ50.00/– இலட்சத்திற்கு பின்வரும் நிதி ஆதாரத்துடன் வரப்பெற்றுள்ளது.

| வ எண் | திட்ட நிதி விவரம் | ஒதுக்கீட்டு தொகை (ரூ இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | TURIF | 30.00 |
| 2 | CGF | 6.00 |
| 3 | CFC | 9.00 |
| 4 | ULB Share | 5.00 |
| | மொத்தம் ரூ | 50.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்ற நிர்வாக அனுமதியை நகர மன்ற தீர்மான எண்: 1306 நாள் : 06.10.2017ல் அனுமதிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி முடிக்கப்பட்டது. திட்ட ஒதுக்கீட்டு தொகை பெற நகராட்சி மூலம் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. திட்ட ஒதுக்கீட்டு (TURIP) தொகை வரப்பெறும் வரை தற்போது பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், திட்ட ஒதுக்கீட்டு (TURIP) தொகை வரப்பெற்றவுடன் பொதுநிதியில் ஈடு செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

Scanned with CamScanner

<u>அலுவலக குறிப்பு –</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய திட்ட ஒதுக்கீட்டு (TURIP) தொகை வரப்பெறும் வரை தற்போது பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும், திட்ட ஒதுக்கீட்டு (TURIP) தொகை வரப்பெற்றவுடன் பொதுநிதியில் ஈடு செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 3291/2017/இ1)

182) [illegible] [illegible] அனுமதிக்கப்பட்டது

**6.** திண்டிவனம் நகராட்சியில் ஓராண்டு சாதனை விளம்பரங்கள் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு துறை விழுப்புரம் மூலம் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்ததற்க்கு கீழ்கண்ட நிறுவனத்திற்கு விளம்பரக்கட்டணத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்ற அனுமதி கோரப்படுகிறது.

| வ. எண். | பட்டியல் எண் மற்றும் தேதி | தொகை ரூ. | விளம்பர நிறுவனம் | விளம்பரம் செய்யப்பட்ட நாளிதழ்கள் | விளம்பர விவரம் |
|---|---|---|---|---|---|
| 1. | CDLE360622/26.03.2018 | 17220 | தினத்தந்தி | தினத்தந்தி | ஓராண்டு சாதனை |
| 2. | CDL018030157/27.03.2018 | 17220 | மாலை மலர் | மாலை மலர் | ஓராண்டு சாதனை |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்படி தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலுத்தியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 2979/2018/இ1)

183) அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

7. இந்நகராட்சியில் வருவாய் நிதி 2017–2018யின் கீழ், நகர மன்ற தீர்மான எண் : 102 நாள் : 28.03.2018ன் படி 02.04.2018 அன்று விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | விலைப்புள்ளிதாரர் பெயர் திருவாளர்கள் | விலைப்புள்ளி ரூ |
|---|---|---|---|
| 1. | இந்நகராட்சி பகுதி காமாட்சியம்மன் கோவில் தெருவில் செஞ்சி சாலை பேருந்து நிலையம் பின்புறம், சந்தை மேடு, வண்டி மேடு (வ.உ.சி திடல்) ஆகிய இடங்களில் சாலையோர வியாபாரிகளுக்கு இடம் ஒதுக்கீடு செய்ய மேற்படி இடத்தினை சுத்தம் செய்யதல் இடம் அளவீடு செய்தல் ஆகிய பணி | வி.சேட்டு<br>1, பெருமாள் கோயில் தெரு,<br>கிடங்கல்–2,<br>திண்டிவனம். | 129540/– |
| | | என். சுப்ரமணியன்,<br>82,வகாப் நகர்,<br>திண்டிவனம் | 137725/– |
| | | பி. சரவணமூர்த்தி,<br>நெ.32–5வது தெரு<br>சஞ்சீவிராயன் பேட்டை,<br>திண்டிவனம் | 139902/– |

<u>அலுவலக குறிப்பு :–</u>

1. மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திரு.வி.சேட்டு அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

3.மேற்படி பணியின்அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர் நோக்கி மன்ற முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 1438/2018/இ1 )

184) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

8. திண்டிவனம் நகராட்சிக்கு புதிய குடிநீர் திட்டம் செயல்படுத்த அரசாணை எண்.11 நாள்.27.01.2014–ல் மதிப்பீடு ரூ.5244.72 இலட்சம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட நிர்வாக அனுமதியில் புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் வழங்குவதற்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கண்ட பணிக்கு திருத்திய மதிப்பீடு தயார் செய்து தொழில் நுட்ப அனுமதி பெறும்போது வீட்டு குடிநீருக்கான இணைப்புகள் வழங்க அதற்கான மதிப்பீட்டிலிருந்து நீக்கப்பட்டது. தற்போது மேற்கண்ட பணியில் நான்கு மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் முழுமையாக செய்து முடிக்கப்பட்டுள்ளது. அதற்கான குடிநீர் பகிர்மான குழாய்கள் பதிக்கப்பட்டு வருகிறது. தலைமை நீரேற்று நிலையத்தில் பத்து ஆழ்துளை கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளது. மூன்று தரைமட்ட நீர் சேகரிப்பு தொட்டிகள் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. பிரதான குடிநீர் நீரேற்று குழாய் 99% பதிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் குடிநீர் திட்டம் 31.07.2018–ல் முழுமையாக முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரும் என தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய கண்காணிப்பு பொறியாளர்கள் கடிதம் நாள்:25.04.2018 மூலம் தெறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது திண்டிவனம் நகராட்சியில் 18459 சொத்து வரி விதிப்புகள் உள்ளன. குடிநீர் இணைப்பில் வீட்டு உபயோகம் 4328 வணிக உபயோகம் 76–என மொத்தம் 4404 குடிநீர் குழாய் இணைப்புகள் உள்ளன. மேற்கண்ட குடிநீர் திட்டம் முடிந்த பிறகு ஏற்கனவே உள்ள குடிநீர் இணைப்புகளையும் ரூ433.50 இலட்சத்திற்கும், அதுபோக மீதமுள்ள 11217 வீடுகளுக்கும் புதிய குடிநீர் இணைப்புகள் வழங்க ரூ433.50 இலட்சத்திற்கும், விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து நகர மன்ற தீர்மான எண் : 161 நாள் : 24.05.2018 அனுமதி பெற்று நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்க ளின் செயல்முறைகள் ந.க. எண் : 13277/2018/WS1 நாள் : 03.07.2018ல் ரூ433.50 இலட்சத்திற்கு வட்டியில்லா கடனாக (Interest Free Loan) தமிழ்நாடு உள்கட்டமைப்பு நகர்புற வளர்ச்சி நிதி நிறுவனம் (Tufidco) மூலம் பெற்று செயல்படுத்திட நிர்வாக அனுமதி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பதிவு செய்யலாம்

(ந.க.எண் : 4425/2007/இ2)

185) பதிவு செய்யப்பட்டது

9. இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்களாகிய படிவங்கள், பேரேடுகள் மற்றும் நோட்டீஸ்கள், பதிவேடுகள் இவற்றினை 2018–2019ம் ஆண்டு காலத்திற்கு வாங்குவதற்காக வருவய் நிதியிலிருந்து ரூ. 5,00,000/– (ஐந்து லட்சம்) இந்நகர் மன்றத் தீர்மானம் எண். 110 நாள். 04.05.2018ல் அனுமதிக்கப்பட்டு 15.06.2018 தேதியன்று ரூ. 4,99,494/–க்கு எழுது பொருட்கள் வாங்கப்பட்டது. மீதம் ரூ. 506/– மட்டுமே உள்ளது. எனவே இனிவரும் 2018–2019ம் ஆண்டில் மேலும் ரூ. 5,00,000/– எழுதுப்பொருட்களை வாங்குவதற்கும் மேற்படி செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

1. அனுமதிக்கலாம்.
2. தமிழ்நாடு மல்டிபர்பஸ் இன்டிகோ சர்வ் திருச்சி நிறுவனத்தின் 12.04.18 தேதிய பட்டியல் தொகை ரூ. 262920/– வழங்கியதற்கும் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 3020/2017/சி2)

186) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

10. இந்நகராட்சியில் கீழ்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் எறையானூர் நீர் உந்துநிலையம் ஆகிய இடங்களில் உள்ள CI Sluice Valve-கள் அதிக அளவு தேய்மானம் ஏற்பட்டுள்ளதால், மேல்நிலை தேக்க தொட்டிகளில் தண்ணீர் ஏற்றும்போது, கசிந்து வெளியே செல்கிறது. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குள் தண்ணீர் சேமிக்க முடியாமல், குடிநீர் வினியோகம் செய்வதில் காலதாமதம் ஆகிறது. எனவே, பழுதடைந்த CI Sluice Valve-களுக்கு பதில் புதிதாக வாங்கி பொருத்தி சரிசெய்ய தோராயமாக செலவினம் ரூ.3.00 இலட்சம்(ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்புபு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

187) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

11. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு–13 மற்றும் தாலுக்கா ஆபிஸ் எதிரில் அமைந்துள்ள நம்ம டாய்லட் கழிப்பிடத்தில் தண்ணீர் வசதி இல்லாததால் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க தோராயமாக செலவினம் ரூ.1.00 இலட்சம் (ரூபாய். ஒரு டலட்ச. மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: -

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

188) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

12. இந்நகராட்சியில் கீழ்கண்ட செஞ்சி ரோடு மேல்நிலை நீர் தேக்க தொட்டியின் INLET PIPE 100 MM PIPE உள்ளது. செஞ்சி ரோடு மேல் நிலை நீர்தேக்க தொட்டியில் உள்ள CI Sluice Valve கள் அதிக அளவு தேய்மானம் ஏற்பட்டுள்ளதால், மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் தண்ணீர் ஏற்றும்போது, கசிந்த வெளியே செல்கிறது. இதனால் குறிப்பிட்ட நேரத்திற்குள் தண்ணீர் சேமிக்க முடியாமல், குடிநீர் விநியோகம் செய்வதில் காலதாமதம் ஆகிறது. எனவே, 100MM PIPE ஐ 150 MM C.I PIPE ஆக மாற்றினால் குடிநீர் நிரம்பும் நேரம் குறையும். மேலும் மோட்டார் பழுது நீக்கம் செய்யவும், ராஜாஜி தெருவில் சுமார் 72 மீட்டா 6 inch PVC PIPE மெயின் புதியதாக மாற்றவும் தோராயமாக செலவினம் ரூ.300 இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும் ) மதிப்பீ தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

189) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

13. இந்நகராட்சிக்குட்பட்ட காட்ராம்பாக்கம் தலைமை நீரேற்று நிலையம் இருந்து எறையானூர் நீர் உந்து நிலையம் வரும் நீரேற்று குழாயில் மூன்று இடங்களிலும் உடைப்பு ஏற்பட்டு உள்ளது. அவ்வுடைப்பை சரி செய்ய இதற்கான தோராய செலவீனம் ரூ.20000/–க்கு (ரூபாய் இருபதாயிரரம மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

190) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

14. இந்நகராட்சிக்குட்பட்ட செஞ்சிரோடு, காந்தி சிலை, நேரு வீதி, ,சன்னை நெடுஞ்சாலை, பாண்டி ரோடு ஆகிய முக்கியமான இடங்களில் போதிய வெளிச்சம் இல்லாத காரணத்தினாலும் மற்றும் மின் கட்டணம் உயர்வை குறைப்பதற்கும் முதலில் 7 இடங்களில் மட்டும் உயர்கோபுர மின் விளக்குகளை LED LIGHT கள் 250 Watts ஆக மாற்றி அமைப்பதற்கு ரூ.8.50/– இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

191) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

15. இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு –26–ல் அமைந்துள்ள பூங்கா தெருவில் புதிய ஆழ்துளை கிணறு அமைக்க தோராயமாக செலவினம் ரூ.1.00 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கலாம்.

192) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

16. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர், அவர்களால் 15.05.2018 அன்று நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் 60 டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்களை பணிக்கு அமர்த்தி ADS கொசு உற்பத்தியை கட்டுப்படுத்துமாறு தெரிவித்துள்ளார். மேலும் ம்ாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் அறிவுரையின் படி டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 10 தற்காலிக கொசு ஒழிப்பு பணியாளர்களை நியமனம் செய்யப்பட்டு கொசு ஒழிப்பு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. எனவே மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் மற்றும் நகராட்சி நிர்வாகம் மண்டல இயக்குநர் ஆகியோர்களின் அறிவுரையின் படி டெங்கு கொசு ஒழிப்பு பணிக்கு 60 தற்காலிகப் பணியாளர்களை 01.06.2018 முதல் பணி அமர்த்திக் கொள்ளவும் இப்பணியாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களின் ந.க.எண்.பிடி2.6191/2015, நாள்.09.04.2016 செயல்முறை உத்திரவின் படி தினக்கூலியாக ரூ.275/– வழங்கவும் இதனால் ஏற்படும் தோராய செலவினம் ரூ.15/– லட்ச.திற்கும் இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

அனுமதிக்கலாம்.

ந.க.எண்.1328/2018/எச்1

193) அனுமதிக்கப்பட்டது

3/7/18

**2018–ம் ஆண்டு ஜீலை மாதம் 31–ம் தேதி செவ்வாய் கிழமை காலை 10.30 மணிக்க நகராட்சி அலுவலகத்தில் நடைபெற உள்ள திண்டிவனம் நகர மன்றத்தின் சாதாரணக் கூட்ட மன்ற பொருள்.**

**முன்னிலை : திரு. பு. ஸ்ரீபிரகாஷ்**
**தனி.அலுவலர்(பொ)**
**திண்டிவனம் நகராட்சி.**

1. இந்நகராட்சிக்குப்பட்ட நேரு விதியில் கிடங்கல் ஏரிக்கு செல்லும் வழியில் உள்ள 500MM MS PIPE பம்பிங்மொன் உடைப்பு ஏற்பட்டு குடிநிர் வீணாகி வருகிறாது. கொந்தமூர் அருவப்பாக்கம் ஒழிந்தளாம் பட்டு ஆகிய இடங்கால் பம்பிங்மொன் உடைப்பு ஏற்பட்டு குடிநிர் வீணாகி வருகிறது. துலைமை நீரேற்று நிலையத்தில் காட்ராம்பக்கம் ஒடை மற்றும் ஒழிந்தளாம் பட்டு அழ் துளை கிணறுகளில் உள்ள 20 HP MOTOR காயில் எரிந்து பழுதடைந்துள்ளது. மேலும் செஞ்சி ரோடு மேல்நிலை தொட்டியில் உள்ள டெலிவரி வால்வு தேய்ந்து குடிநிர் வெளியோறிவருவதால் STORAGE செய்வதற்கு கடினமாக உள்ளது. மேற்கண்ட பணிகளை உடனடியாக செய்ய தோராயமாக செலவீனம் ரூ2.90 இலட்சம்(ரூபாய் இரண்டு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்) மேற்படி பணிக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-
1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிக்குரிய செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்காலம்.

194) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

2.நகரில் உள்ள அனைத்து வீடுகளில் உள்ள கழிப்பறைகளில் உற்பத்தியாகும் கொசுவினை தடுக்க, கழிப்பறைகளில் கொசு வலைகள் வாங்க 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அளித்துள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | கொசுக்களின் உற்பத்தியை கட்டுப்படுத்த நச்சுத்தொட்டிகளில் காற்று போக்கு குழாய்களில் கொசு வலைகள் கட்டுதல். | ரூ.6,00,000/ – | Thirumurugan Traders 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakka – 637 001. | ரூ.39.50 2 Layer 1 Bag |
| | | | Shree Plasto Tech No.31/1, 6th Main Road, Thirumudivakkam, Chennai – 600 044. | ரூ.43.00 2 Layer 1 Bag |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thirumurugan Traders, 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakka – 637 001. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2286/ 2018 / எச்1)

195) அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

3.இந்நகரில் உள்ள பொது சுகாதார கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்களில் துர்நாற்றம் இன்றி பராமரிக்க பணிக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் சப்ளை செய்யும் பணிக்கு 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறபட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார கழிப்பிடங்கள் மற்றும் பொது இடங்களில் துற்நாற்றம் இன்றி பராமரிக்கும் பணிக்கு தேவையான லெமன் கிராஸ் ஆயில் சப்ளை செய்யும் பணி. | ரூ.5,00,000/– | Thirumurugan Traders 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakka – 637 001. | ரூ.2800/– 1 லிட்டர் |
| | | | Shree Plasto Tech No.31/1, 6th Main Road, Thirumudivakkam, Chennai – 600 044. | ரூ.2950/– 1 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thirumurugan Traders, 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakka – 637 001. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.971 / 2018 / எச்1)

(96) அனுமதிக்கப்பட்டது

4. இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் உரம் தயாரிக்கும் பணிக்கு தேவையான EMI Solution சப்ளை செய்ய 12.07.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார பிரிவில் உரம் தயாரிக்கும் பணிக்கு தேவையான EMI Solution சப்ளை செய்தல். | ரூ.9,90,000/– | Shree Plasto Tech No.31/1, 6th Main Road, Thirumudivakkam, Chennai – 600 044. | ரூ.1100/– 1 லிட்டர் |
| | | | Thirumurugan Traders 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakkal – 637 001. | ரூ.950/– 1 லிட்டர் |

<u>அலுவலக குறிப்பு :–</u>

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள Thirumurugan Traders 5/3. Sllandiamman Kovil street, kottai Main Road, Namakka – 637 001. ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம்.

(..எண். 2287/ 2018 / எச்1)

(97) அனுமதிக்கப்பட்டது

Scanned with CamScanner

5.இந்நகராட்சியில்பயன்பாட்டில் இருக்கும் இரண்டு ஈப்பு வாகனங்களுக்குINSURANCE 07.09.2018ல்முடிவடையஉள்ளதால்TN 16 A 5556 ரூ 15435/– மற்றும் TN 16 C 2346 ரூ 16705/- மெத்தசெலவீனம் ரூ 32140 மட்டும்.UNITED INDIA INSURANCE CO.LTD இருந்து கடிதம் வரப்பட்டது.கடிதம் வரப்பட்டதைதொடர்ந்து காப்பீடுசெய்யமன்றஅனுமதிவேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படிபணிக்குரியசெலவினத்தைநகராட்சிவருவாய்நிதியிலிருந்துமேற்கொள்ளவும் மன்றஅனுமதிக்காலம்.

198) [illegible]

6. திண்டிவனம் நகராட்சி– ஒப்பந்ததாரர்களின் பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் மற்றும் இந் நகராட்சி குத்தகைதாரர்களால் செலுத்தப்பட்டு வரும் கடை வாடகைக்கான CGSTமற்றும் SGST கட்டணங்கள் உரிய அரசு தலைப்பில் செலுத்துவதற்காக, Online மூலம் பதிவு செய்வதற்காக இந்நகராட்சிக்கு GST எண் பெறப்பட்டுள்ளது. (GST எண் 33CHET03344F1DA)

மேற்கண்ட பதிவு எண்ணினை உள்ளூரில் உள்ள இணைய அலுவலகம் Vino & Co, 6P/48, குழந்தைவேல் தெரு, திண்டிவனம் என்ற நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டது. இதற்குண்டான தொகை ரூ.3460/– நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1)மன்றம் அனுமதிக்கலாம்.

2)பணியின் அவசர அசியம் கருதி மேற்கண்ட பணியினை Vino & Co நிறுவனத்திடம் நேரடியாக ஒப்படைக்கப்பட்டு பணி செய்து முடிக்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

199) [illegible]

(ந.க.எண். 3194 /2018/பி2)

Scanned with CamScanner

7. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2017–18ஆம் ஆண்டு மான்ய கோரிக்கை எண்.34 அறிவிப்புகள் எண். 24ன் படி திண்டிவனம் நகராட்சி பகுதிகளில் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி மற்றும் உள்ளாட்சி அமைப்பு பங்களிப்பு திட்டம் 2017–18ன் கீழ் பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த ரூ. 230.00 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி திட்டத்தினை 2017–2018ம் ஆண்டில் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி ஒதுக்கீடு பெற்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த உரிய நிர்வாக அனுமதியினை பெற நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களுக்கு உரிய கருத்துருக்களை அனுப்ப மன்றத்திற்கு பொருள் வைக்கலாம் அனுமதிக்கு கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

200) அனுமதிக்கப்பட்டது

8. திண்டிவனம் நகராட்சி முருங்கப்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் உதவியாளர்களுக்கு சிறப்பு விடுதி கட்டிடம் கட்டுவதற்காக நகராட்சி நிர்வாகம் ஆணையர், நகராட்சி நிர்வாகம், சென்னை அவர்களது கடித ந.க.எண்: 27061/2015/UPA–2 மூலம் விரிவான திட்ட அறிக்கை சமர்பிக்க கோரியும் உரிய மேல் நடவடிக்கை தொடர கோரியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து திண்டிவனம் அரசு மருத்துவ மனையில் சிகிச்சை பெற வரும் நோயாளிகளின் உதவியாளர்களுக்கு சிறப்பு விடுதி கட்டிடம் கட்டுவதற்காக ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதை அரசுக்கு சமர்பிக்கவும், அதற்கான அனைத்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–

மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 3388/2015/இ1

201) அனுமதிக்கப்பட்டது.

Scanned with CamScanner

9. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திண்டிவனம் கிராமம் சர்வே எண்கள். 135/2B பகுதியில் 2.0 ஏக்கர் (அ) 87120.00 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **தட்சணாமூர்த்தி** நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனி,ல் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 1046/2017/விம, நாள். 04.07.2018–ல் திண்டிவனம் கிராமம் சர்வே எண்கள். 135/2B பகுதியில் 2.0 ஏக்கர் (அ) 87120.00 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **தட்சணாமூர்த்தி** நகர் என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ ந.ஊ.உ.இ (வி.ம) எண். 628/2018(R) என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

**<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 2.0 ஏக்கர் (அ) 87120.00 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 52 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 32 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 20 |

**<u>பொது ஒதுக்கீடு</u>**

பூங்கா 3000 ச. அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.09%)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 1, 2, 12, 20, 33, 34 பகுதி, 37, 38, 39, 43, 44, 45, 46, மற்றும் 50 ஆகிய மனைகளின் பரப்பளவு 1922 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00 வீதம் 1922 ச. மீட்டருக்கு ரூ. 115320/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் 1922 ச. மீட்டருக்கு ரூ. 480500/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2936/2018/எப்1)

2021)

அலுவலக குறிப்பு ஏற்கப்பட்டது.

Scanned with CamScanner

10\. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திண்டிவனம் கிராமம் சர்வே எண்கள். 126/12 பகுதி ஆகியவற்றில் 1.66 ஏக்கர் (அ) 72309.60 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள சுவாமி சம்பங்கி சிட்டி என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனி,ல் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 1331/2018/விம, நாள். 30.05.2018–ல் திண்டிவனம் கிராமம் சர்வே எண்கள். 126/12 பகுதி ஆகியவற்றில் 1.66 ஏக்கர் (அ) 72309.60 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள சுவாமி சம்பங்கி சிட்டி என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ/ ந.ஊ.உ.இ (வி.ம) எண். 467/2018(R) என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 1.66 ஏக்கர் (அ) 72309.60 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 47 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 5 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 42 |

<u>பொது ஒதுக்கீடு</u>

பூங்கா–I 3336.00 ச. அடி
பூங்கா–II 1778.00 ச. அடி
மொத்தம் – 5114.00 ச.அடி

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 1 முதல் 9, 13 முதல் 34, 41 பகுதி, 42 முதல் 47 வரை ஆகிய மனைகளின் பரப்பளவு 4208 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00 வீதம் 4208 ச. மீட்டருக்கு ரூ. 252480/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் 4208 ச. மீட்டருக்கு ரூ. 1052000/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2503/2018/எப்1)

203) மன்றம் ஒப்பு அளிக்கப்பட்டது.

11. அரசாணை (நிலை) எண். 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 04.05.2017 மற்றும் அரசாணை (நிலை) எண். 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி (UD (3)) துறை நாள். 13.10.2017–ன் படி திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அவரப்பாக்கம் கிராமம் சர்வே எண்கள். 58/2–ல் 0.49 ஏக்கர் (அ) 21344.40 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **ஆசிரியர் நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவின் உரிமையாளர் மனைகளை வரன்முறைப்படுத்த ஆன்லைனில் விண்ணப்பித்ததை தொடர்ந்து விழுப்புரம் மண்டலம் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் அவர்களின் கடித நடவடிக்கைகள் ந.க.எண். 1047/2017/விம, நாள். 14.07.2018–ல் அவரப்பாக்கம் கிராமம் சர்வே எண்கள். 58/2–ல் 0.49 ஏக்கர் (அ) 21344.40 ச.அடி பரப்பளவில் அமைந்துள்ள **ஆசிரியர் நகர்** என்ற அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொ.ஒ.ம.வ / ந.ஊ.உ.இ (வி.ம) எண். 629/2018(R) என எண்ணிடப்பட்டு (தன்னிச்சையாக) மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

<u>மனைப்பிரிவு ஒதுக்கீடு விபரம்</u>

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவு மொத்த பரப்பளவு | – | 0.49 ஏக்கர் (அ) 21344.40 ச.அடி |
| மொத்த மனைகள் | – | 16 |
| விற்பனை செய்யப்பட்ட மனைகள் | – | 9 |
| விற்பனை செய்யப்படாத மனைகள் | – | 7 |

<u>பொது ஒதுக்கீடு</u>

பூங்கா - 556.72 ச. அடி (விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பளவில் 10.29%)

மேற்படி கொள்கை அளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமையுடையதாகிறது.

மேற்படி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள மனைகளுக்கு வரன்முறைப்படுத்துதல் கட்டணங்கள் அதாவது மனை எண்கள். 1, 11, 12, மற்றும் 16 ஆகிய மனைகளின் பரப்பளவு 276 ச.மீட்டர் பரப்பளவிற்கு 1 சதுர மீட்டருக்கு ரூ. 60.00 வீதம் ஆக 276 ச. மீட்டருக்கு ரூ. 16560/– மனைபிரிவு உரிமையாளரால் அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் வளர்ச்சி கட்டணம் 1 ச.மீட்டருக்கு ரூ. 250.00 வீதம் ஆக 276 ச. மீட்டருக்கு ரூ. 69000/– நகராட்சி கருவூலத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டுள்ளது. ஆகையால் மேற்படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்த பரிந்துரைத்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி மனைப்பிரிவு வடிவமைப்பு வரைபடத்திற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சாலைகள் மற்றும் பூங்கா ஒதுக்கீடுகள் இந்நகராட்சிக்கு தன்னிச்சையாக உரிமை கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தினை நிபந்தனைகளுக்குட்பட்டு வரன்முறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2934/2018/எப்1)

204) அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது

31.7.18

Scanned with CamScanner